மாதம் இருமுறை

# திரிசக்தி

COMPLIMENTARY COPY
NOT FOR SALE

இல்லம் தேடி வரும் இறை இன்பம்

ரூ.15

பிப்ரவரி 16–28, 2010
Vol - 1 Iss. - 15

★ மருதமலை பாம்பாட்டிச் சித்தர்




## நீதியரசர் இஸ்மாயிலுக்கு என்ன பிரசாதம் தந்தார் பெரியவா?

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில்...

## ஜோசப் நிகழ்த்திய வைணவ உபன்யாசம்!



28 நீதியரசர் இஸ்மாயிலுக்கு என்ன பிரசாதம் தந்தார்?




70 ஜோசப் நிகழ்த்திய வைணவ உபன்யாசம்!




42 குறை தீர்க்கும் குணசீலம்



78 ஆண்டவன் சேவையில் குலசேகர ஆழ்வார்



58 தரிசன அனுபவம்



80 மகா அவதார் பாபாஜி

| | |
|---|---|
| சொன்னது நம்மாளு | 46 |
| கேள்வி - பதில் | 48 |
| புத்தக அறிமுகம் | 51 |
| ராசிபலன் | 52 |
| ஜெய் ஜாகேஷ்வர் | 60 |
| சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமி | 64 |
| கேளுங்கள் தரப்படும் | 66 |
| கடிதங்கள் | 68 |
| சந்தா படிவம் | 73 |
| எங்க ஊரு விசேஷம் | 75 |


சதுரகிரி யாத்திரை அனுபவங்கள்,
பலன் தருமா பரிகாரம் அடுத்த இதழில்...




ஜோசப்

## திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில்...

# ஜோசப் நிகழ்த்திய வைணவ உபன்யாசம்!

ஸ்ரீ ராமானுஜரின் சிஷ்யர்களில் முக்கியமானவர் கூரத்தாழ்வான். அவருடைய ஆயிரமாவது திரு அவதாரத் திருநாள் விழா சென்னை பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்றது. வைணவ பண்டிதர்கள் பலர் சொற்பொழிவு நிகழ்த்தினர். இதில், கடந்த 4–ம் தேதியன்று 'ஸ்ரீவைஷ்ணவ சுடராழி' ஜோசப், 'கூரத்தாழ்வானும் ராமானுஜரும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

ஜோசப்...?

டி.ஏ. ஜோசப் தமிழ், ஆங்கிலத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருந்தாலும், தன்னுடைய விருப்பத்துக்காக சம்ஸ்கிருதமும் படித்திருக்கிறார். இந்து தத்துவத்தை முழுவதுமாகப் படித்தவர். நிறைய ஊர்களுக்குச் சென்று பிரசங்கம் செய்துவருகிறார். உபநிஷதங்கள், பகவத்கீதை, ராமாயணம், மகாபாரதம் போன்ற தலைப்புகளில் இதுவரை ஆயிரம் மேடைகளுக்கு மேல் ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பொழிவாற்றி இருக்கிறார். ஸ்மிருதிகள், ஸ்ரீராமானுஜரின் விஸிஷ்டாத்வைதம், புராணங்கள், ஆச்சாரியர்கள் பற்றியும் நிறைய குறுந்தகடுகள்

ஸ்ரீபார்த்தசாரதி ஆலயம்...



"தவளையை விழுங்கியதைப் பார்த்த மறுகணமே மயக்கமுற்றவர் கூரத்தாழ்வான். வாழை இலையை வெட்டினால் வரும் சாறைக் குருதி என நினைத்து வருத்தப்பட்டவர்."

வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் சுவாமிகள் ஜோசப்பின் சொற்பொழிவைக் கேட்டு இவரைப் பாராட்டி, 'கடைசிவரை நீ இப்படியே இரு. எந்தக் காரணம் கொண்டும் உன் பெயரிலோ, உடையிலோ, உருவத்திலோ எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ளாதே' எனக் கூறி, அவர்தான் இவருக்கு, 'ஸ்ரீவைஷ்ணவ சூடாமி' என்ற பட்டத்தையும் கொடுத்திருக்கிறார்.

இனி, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் டி.ஏ.ஜோசப் நிகழ்த்திய உபன்யாசத்தில் இருந்து சில பகுதிகள்...

''ஸ்ரீ ராமானுஜரின் அபிமான சீடராக கூரத்தாழ்வான் விளங்கினார். இவர் பிறந்தது காஞ்சியில் உள்ள கூரம் என்ற ஊரில். கூரம் என்பதற்குப் பொருள் அரிசி, சாதம் எனப்படும். இங்கு பிறந்ததால், கூரத்தாழ்வான் என அழைக்கப்பட்டார். பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். இயற்பெயர் ஸ்ரீவத்சாங்கர். மிகுந்த இரக்க குணம் படைத்தவர். உதாரணத்துக்கு, பாம்பு ஒன்று தவளையை விழுங்கியதைப் பார்த்த மறுகணமே மயக்கமுற்று விழுந்தவர் கூரத்தாழ்வான். வாழை மரத்தில் இலையை வெட்டினால் வரக்கூடிய சாறைக் குருதி என நினைத்து வருத்தப்பட்டவர். கருணை, இரக்கம் ஒவ்வொரு வைஷ்ணவருக்கும் வேண்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்தியவர். மேலும் ஆச்சாரமுடைய வைணவர் எப்படி வாழவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர். ஏனென்றால், சொல்வது யாவருக்கும் எளிது. ஆனால், அதன்படி வாழ்ந்து காட்டுவது மிகுந்த சிரமம். கூரத்தாழ்வான் அப்படியே வாழ்ந்து காட்டியவர். இவருடைய மனைவி ஆண்டாள்.



உபன்யாசத்தின்போது,...

தன் வசம் இருந்த சொத்துக்களை எல்லாம் வறியவர்களுக்கு வழங்கிவிட்டு, ஸ்ரீரங்கத்தில் குடிபுகுந்தார் கூரத்தாழ்வான். அப்போது ஒருநாள் தொடர்ந்து மழை பெய்தது. இதனால் அனுஷ்டானங்களைச் சரிவரச் செய்ய முடியவில்லை; உணவும் உண்ணவில்லை. அவர் மனைவியான ஆண்டாளோ தம் மனதில், ''அப்பா ஸ்ரீரங்கநாதா! மூன்று வேளைகளும் உனக்கு, இனிப்புடன் பிரசாதம் செல்கிறது. உன் பக்தனாகிய என் கணவரோ இங்கு பட்டினியாக இருக்கிறார். நீ மட்டும் வயிறார நன்றாக அமுது உண்கிறாயே! உனக்கே இது சரியா?'' என நினைத்தார். பக்தர்களின் மனநிலை அறியாதவரா ரங்கன்? அந்த வேளையில், அரங்கனுக்கு பிரசாதத்தை நிவேதனம் செய்துகொண்டிருந்தார் அர்ச்சகர்.

அர்ச்சகரின் நினைவில் அரங்கன் தோன்றி, அவருக்கு நிவேதித்த பிரசாதங்களை நேராக கூரத்தாழ்வான் வீட்டுக்குக் கொண்டுபோகுமாறு பணித்தார். அவ்விதமே அர்ச்சகரும் குடை, ஸாமர வாத்யங்களுடன், யானை பரிவாரங்களுடன் கூரத்தாழ்வான் வீட்டுக்குச் சென்று, 'அரங்கன் என்னை அனுப்பி இதைக் கொடுத்துவரச் சொன்னார்' எனச் சொல்ல, கூரத்தாழ்வான் அதிர்ந்துவிட்டார். ஆண்டாள் அதை எடுத்து தன்


உபன்யாசம் கேட்க...



ஜோசப் குடும்பத்தினருக்கு ஸ்ரீபார்த்தசாரதி ஆலயம் சார்பாக மரியாதை

கணவனிடம் கொடுத்தாள். கூரத்தாழ்வான் ஆண்டாளை நோக்கி, 'நீ ஏதாவது திருவரங்கனிடம் முறையிட்டாயா?' என வினவினார். 'ஆமாம், என் கணவர் பட்டினி கிடக்கிறார். உனக்கு மட்டும் பிரசாதம் போகிறதே' என தான் நினைத்ததை ஆண்டாள் ஒப்புக்கொண்டுவிட்டார். ஸ்ரீரங்கனைத் தேவை இல்லாமல் தொந்தரவு செய்ததற்காக முதலில் ஆண்டாளைக் கடிந்து கொண்டாலும், பிறகு இருவரும் பிரசாதத்தை உண்டனர்.

நாத்திகத்துக்கும் கூரத்தாழ்வான் பதில் கூறியிருக்கிறார். கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கு, 'கடவுள் இருக்கிறார் என்றால் இருக்கிறார்தான்' என்று சொல்கிறார். இதற்கு உதாரணத்துக்கு உங்கள் நண்பரைத் தேடி அவர் வீட்டுக்குச் செல்கிறீர்கள். வெளியே அவருடைய மகன் விளையாடிக் கொண்டிருக்கிறான். அவனிடம், 'அப்பா எங்கே?' எனக் கேட்கிறீர்கள். அதற்கு அவன், 'இல்லை' என்கிறான். அதாவது, இப்போது வீட்டில் இல்லை என்ற பொருள்தானே தவிர, ஒரேயடியாக அவர் இல்லாமல் போகவில்லை. அதேபோல்தான் கடவுள் இருக்கிறாரா என்ற கேள்விக்கான பதிலும். தர்க்க சாஸ்திரம் இதை தெளிவுபட விளக்குகிறது.

நம்முடைய இந்திய பஞ்சாங்கம்தான் உலகப் பிரசித்தி பெற்றது. அமெரிக்காவிலுள்ள 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சி மையமே, துல்லியமான நேரத்தைக் கணிக்க – நம் இந்திய பஞ் சாங்கத்தைத்தான் நம்பி இருக்கிறது. இந்தியாவில் இல்லாததா... கணிதம், இலக்கியம், இல்லற வாழ்க்கை, சிற்பம், சித்திரம் என எல்லாவற்றிலும் ஜாம்பவான்களாகத் திகழ்ந்தவர்கள் நம் இந்தியர்கள். ஞான தீட்சை என்பது இங்குதான் நிறைய பேருக்கு அமைந்திருந்தது. 'உலகின் அதிக உயரத்தை எட்டிய நாடு இந்தியா!' எனக் கூறிய ஆல்பர்ட் ஐன்ஸ்டின், 'எனக்கு மறுபிறவி என்ற ஒன்று இருந்தால், இந்தியாவில்தான் பிறப்பேன்' என்று கூறி இருக்கிறார். ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்பட வேண்டிய விஷயம் அல்லவா இது!

நாம் எல்லோரும் கோயிலுக்குள் நுழைந்ததும், நேரடியாக சந்நிதிக்குப் போய்விடுகிறோம். அது தவறு. கூரத்தாழ்வான் இதை நயம்பட விளக்குகிறார். 'கோயிலினுள் நுழைந்ததுமே அங்குள்ள தூண்களில் இருந்து விமானம் வரை எல்லாவற்றையும் பார்த்து வணங்க வேண்டும். கோயிலினுள் இருக்கும் கருடாழ்வார், சக்கரத்தாழ்வார், ஆண்டாள் சந்நிதி என நாம் எல்லாவற்றையும் ரசிக்க வேண்டும். ரசிக்க வேண்டுமென்றால், காதலன் தன் காதலியை எப்படி அணு அணுவாக ரசிப்பானோ அதுபோல் ரசிக்க வேண்டும்' என்கிறார்.

ஒருமுறை கூரத்தாழ்வான் திருவரங்கனிடம், 'என்னை நீங்கள், உடனே ஸ்ரீவைகுண்டத்துக்கு அழைத்துக்கொள்ள வேண்டும்' என்றார். இதைக் கேட்ட ராமானுஜர், 'நான் உயிரோடிருக்கும்போது நீ மட்டும் எப்படி வைகுண்டத்துக்குப் போகலாம்' எனக் கேட்டார். அதற்கு கூரத்தாழ்வான், 'தங்களுக்கு இங்கு எல்லா பணிவிடைகளும் செய்துகொண்டிருக்கிறேன். அங்கு நீங்கள் வரும்போது, உங்களை வரவேற்க நான்



உபன்யாசத்தை ஆர்வமுடன் கேட்கும் பக்தர்கள்...

இருக்க வேண்டாமா? அதற்காகத்தான் முன்கூட்டியே செல்லத் தயார் ஆகிறேன்' என்றாராம்'' என இவ்வாறாக பல்வேறு தகவல்களுடன் டி.ஏ. ஜோசப் பிரமாதமாக சொற்பொழிவாற்றினார். பார்த்தசாரதி கோயில் இணை ஆணையர் ஜெயராமன் உட்பட, இந்தத் திருவிழாவில் வைணவ பண்டிதர்களும், பக்தர்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

– பி.தனராஜ்

படங்கள்: சேவியர்